# தேங்காய் மற்றும் கொப்பரையை உடனே விற்கலாம்

உலகளவில், இந்தியா தேங்காய் உற்பத்தி செய்யும் நாடுகளில் மூன்றாம் இடம் வகிக்கிறது. 2013-14ம் ஆண்டில் 2.14 மில்லியன் எக்டரில் தென்னை பயிரிடப்பட்டு 14.91 மில்லியன் டன்கள் தேங்காய் உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் தேங்காய் உற்பத்தியில் 83 சதவீதம் முறையே சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியில் பங்கு வகிக்கின்றன. தேங்காய் உற்பத்தியில் தமிழ்நாடு, நாட்டில் முதலிடம் வகிக்கிறது.

தமிழ்நாட்டில் (2013-14) தென்னை 0.46 மில்லியன் எக்டரில் பயிரிடப்பட்டு 4.76 மில்லியன் டன்கள் தேங்காய் உற்பத்தி செய்யப்பட்டது. கோயம்புத்தூர், திருப்பூர், தஞ்சாவூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, வேலூர் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் தேங்காய் பெருமளவில் உற்பத்தியாகிறது. இம்மாவட்டங்களிலிருந்தும், கேரளாவிலிருந்தும் சந்தைக்கு தேங்காய் மற்றும் கொப்பரை வரத்து தற்சமயம் துவங்கியுள்ளது. கர்நாடகாவிலிருந்து வரும் வரத்து ஜுலை மாதத்திலிருந்து தொடங்க உள்ளது. இந்த வரத்து வரும் நவம்பர் மாதம் வரை தொடரும். தற்போதைய நிலையில் அவல்பூந்துறை விற்பனைக் கூடத்தில் தேங்காய் டன்னிற்கு ரூ.23,000 வரை விற்கப்படுகிறது. சராசரியாக 550 - 600 கிராம் எடை அளவு கொண்ட ஒரு தேங்காய் ரூ.13 முதல் ரூ.14 வரை விற்கப்படுகிறது. கொப்பரை கிலோவிற்கு ரூ.78 - 82 வரை விற்கப்படுகிறது. இவ்விலை குறைவிற்கான காரணம் தேங்காய் எண்ணெய் மற்றும் கொப்பரை இருப்பு அதிகரித்ததேயாகும்.

இச்சூழலில் வருகின்ற மாதங்களில் தேங்காய் மற்றும் கொப்பரை விலை நிலை பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக அவல்பூந்துறை விற்பனைக் கூடத்தில் நிலவிய தேங்காயின் விலை மற்றும் கொப்பரையின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆராய்ந்தது.

ஆய்வுகளின் அடிப்படையில், அவல்பூந்துறை விற்பனைக் கூடத்தில் பண்ணை விலை ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் மாதங்களில் டன்னிற்கு ரூ.21,000 - ரூ.22,000 அதாவது காய் ஒன்றிற்கு ரூ.12 முதல் 13 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. கொப்பரையின் விலை அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கிலோவிற்கு ரூ.78 முதல் ரூ.80 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே,

விவசாயிகள் மேற்கண்ட விலை தகவல் அடிப்படையில் தேங்காய் மற்றும் கொப்பரையை விற்பது பற்றிய முடிவுகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்- 641 003.
தொலைபேசி :- 0422-2431405

**<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வாசனை மற்றும் மலைத்தோட்ட பயிர்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்- 641 003.
தொலைபேசி எண் :- 0422-6611284